(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 9.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 பெப்ரவரி 22 செவ்வாய்க்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

4/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் பொத்துஹெர தொடக்கம் கலகெதர வரையிலான மூன்றாம் கட்ட நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஆமெனில், அவ் ஒவ்வொரு —

(i) ஒப்பந்தத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(ii) ஒப்பந்தம் வழங்கப்படும்போது பின்பற்றப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) ஒப்பந்தத்தினை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி ஒப்பந்தங்களுக்காக நிதி செலுத்தப்படும்போது பின்பற்றப்படுகின்ற நிதி முறை யாதென்பதையும்;

(ii) மேற்படி செலுத்தல்களுக்கான நிதியைப் பெற்றுக்கொள்ளும் விதம் யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

33/2022

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் திராட்சை உற்பத்தி ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) திராட்சை உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள திராட்சை இனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) திராட்சை செய்கைக்கு உகந்த காலநிலை காணப்படுகின்ற மாவட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் திராட்சை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கை திராட்சையை ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் திராட்சை ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

246/2022

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பலாங்கொடையிலிருந்து குருபெவில, மெத்தேகந்த, ஹெலவத்த ஆகிய கிராமங்களுக்கு ஒரு நாளில் பயணிகள் பேருந்துகள் செயற்படுத்தப்படும் தடவைகளின் எண்ணிக்கை அண்மைக்காலமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும்;

(ii) இதனால் அப்பிரதேச மக்கள் பாரிய சிரமத்திற்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமத்திற்கு நாளொன்றுக்குச் செயற்படும் பயணிகள் பேருந்துகளின் பயணத் தடவைகளின் எண்ணிக்கையை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அப்பேருந்து பயணத் தடவைகளின் எண்ணிக்கைகளை அதிகரிப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

567/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மூலதன கூட்டுறவு வங்கிக்குச் சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ் வாகனங்களில் மேற்குறிப்பிட்ட வங்கியினதும் உத்தியோகத்தர்களினதும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி வங்கிக்குச் சொந்தமான வாகனங்கள் வெளி ஆட்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அந்த ஒவ்வொரு நபரினதும் பெயர் மற்றும் முகவரி என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1020/2022

கௌரவ சாந்த பண்டார,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் பிங்கிரிய பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மக்கள் கடும் குடிநீர் தட்டுப்பாடு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) இன்றளவில் பிங்கிரிய – சிலாபம் நீர் விநியோகத்திட்டம் செயற்படுத்தப் படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நீர் விநியோகத் திட்டத்திற்கான நீரை கொண்டு செல்லும் குழாய் பாதையின் இரு மருங்கிலும் அமைந்துள்ள கிராமங்களுக்கு மேற்படி நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் நீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி கிராமங்களுக்கு நீர் வழங்குவதற்காக வேறு நீர் விநியோகத் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1176/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வ/ஹிங்குராணை சீனித் தொழிற்சாலை (தனியார்) நிறுவனத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1190/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபைக்கு உரித்தான சூரியசக்தி மற்றும் காற்று மூலமான மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் கொள்ளளவு;

(ii) தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற சூரியசக்தி மற்றும் காற்று மூலமான மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் கொள்ளளவு;

(iii) எதிர்காலத்தில் நிர்மாணிக்க உத்தேசித்துள்ள சூரியசக்தி மற்றும் காற்று மூலமான மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் கொள்ளளவு;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1309/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள சமையல் எரிவாயு பாவனையாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை மற்றும் அதன் கொள்ளளவு என்பன ஒவ்வோர் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமையல் எரிவாயு சிலிண்டரில் உள்ளடங்கியுள்ள எல்.பீ. எரிவாயுவில் காணப்பட வேண்டுமென ஏற்றுக்கொள்ளப்பட்ட சேர்மானம் யாதென்பதையும்;

(ii) மேற்படி சேர்மானத்தை தீர்மானிக்கும் நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சமையல் எரிவாயு சிலிண்டரில் உள்ளடங்கியுள்ள எல்.பீ. எரிவாயுவின் தரத்தை தீர்மானிக்கும் நிறுவனம் யாதென்பதையும்;

(ii) அதற்கமைவாக, உரிய தரத்தைக் கொண்டுள்ளது என்பதைச் சோதனை செய்து உறுதிப்படுத்தும் நிறுவனம் யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

1467/2022

கௌரவ ரோஹண பண்டார,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுர நகர எல்லைக்குள் பல சட்டவிரோத நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி நிர்மாணிப்புக்களைத் தடுப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1727/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள வன ஒதுக்குப் பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வன ஒதுக்குப் பிரதேசங்களுக்குரிய மொத்த நிலப் பரப்பு யாதென்பதையும்;

(iii) மேற்படி வன ஒதுக்குப் பிரதேசங்களில் சுற்றாடலை மாசாக்கும் முறையற்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக சூழல் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

நிதி அமைச்சர்,— மிகைக்கட்டண வரி,— மிகைக்கட்டண வரியினை விதிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பெருந்தோட்ட அமைச்சர்,— விளைபொருட் தரகர்களுக்கு உரிமமளித்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1979 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, விளைபொருட் தரகர்களுக்கு உரிமமளித்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2(4), (6) ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்ட அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்ரல் 08 ஆம் திகதிய 2222/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

பெருந்தோட்ட அமைச்சர்,— இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்ட அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 2241/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 நவம்பர் 30 ஆம் திகதிய 2256/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள்அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 11 ஆம் திகதிய 2262/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 11 ஆம் திகதிய 2262/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 11 ஆம் திகதிய 2262/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 13 ஆம் திகதிய 2262/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 நவம்பர் 15 ஆம் திகதிய 2254/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

கமத்தொழில் அமைச்சர்,— மரங்களை வெட்டி வீழ்த்துதல் (கட்டுப்படுத்தல்) சட்டத்தின் கீழ் கட்டளை,— (452 ஆம் அத்தியாயமான) மரங்களை வெட்டி வீழ்த்துதல் (கட்டுப்படுத்தல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 யூன் 18 ஆம் திகதிய 2232/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5(3) (ஆ) மற்றும் 30(3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 2249/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

18.

நீதிமன்றங்களை அவமதிப்புச் செய்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.